## சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை — வேடிக்கை பார்க்கின்ற இடத்திலிருந்து

# தமிழ்நாடு கலந்துகொள்வதுடன் - வெற்றிபெறும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்த அரசு, நம் ‘திராவிட மாடல்’ அரசு!

### புதுக்கோட்டையில், ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்கும் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

புதுக்கோட்டை,பிப்.18-

**புதுக்கோட்டையில், 8 மாவட்டங்களில் உள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான 4,157 கலைஞர் விளையாட்டு உபகரணங்களை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளாட்சிப் பிரதிநிதிகளிடம் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**மேலும், மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகள், மாற்றுத்திறனாளி சகோதர-சகோதரிகள் என 828 பயனாளிகளுக்கு ரூ.33.15 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.**

**அப்போது அவர், ‘‘நம் திராவிட மாடல் அரசின் முன்னெடுப்புகளால் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை, வேடிக்கை பார்க்கின்ற இடத்திலிருந்து இன்று தமிழ்நாடு, சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்வது மட்டுமல்லாமல், அதில் வெற்றி பெறுகின்ற ஒரு வாய்ப்பையும் முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்றைக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குகின்ற நிகழ்ச்சி, பொதுமக்களுக்குச் சுமார் 33 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில், உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றதற்கு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

திராவிட மாடல் அரசுக்குப் பெருமை

முதலில் இந்த விழாவை, இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம்முடைய மாவட்ட அமைச்சர்கள் ரகுபதி அவர்களுக்கும் மெய்யநாதன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இருவரும் புதுக்கோட்டையின் வளர்ச்சிக்குப் போட்டி போட்டுக்கொண்டு பல்வேறு திட்டங்களை, இந்த மாவட்டத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களால் இந்த மாவட்டத்துக்கும் பெருமை, நம்முடைய திராவிட மாடல் அரசுக்கும் பெருமை.

இன்று இந்த நிகழ்ச்சிக்கு நிறைய விளையாட்டு வீரர்கள் வந்திருக்கிறீர்கள், அதே போல நிறைய மகளிரும் வந்திருக்கிறீர்கள். மகளிர் அனைவரும் கூடுதல் மகிழ்ச்சியோடு வந்திருக்கிறீர்கள். ஏனெனில், நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்கு மகளிருக்காகவும் இளைஞர்களுக்காகவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், ஒரு திட்டம்தான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்.

### விடியல் பயணத் திட்டம்

2021-இல் நம்முடைய திராவிட மாடல் அரசு, ஆட்சிப் பொறுப்பேற்றதுமே முதலமைச்சர் இட்ட முதல் கையெழுத்து, மகளிருக்கான விடியல் பயணத் திட்டக் கையெழுத்து தான். இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலமாக, இன்று தமிழ்நாடு முழுவதும் இந்த 4 ஆண்டுகள் 10 மாதங்களில் 960 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தப் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் சுமார் 20 கோடி பயணங்களை, இந்த மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் மூலம் மேற்கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு மகளிரும் சுமார் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமித்திருக்கிறீர்கள்.

காலையில் சீக்கிரம் வேலைக்குச் செல்கின்ற தாய்மார்களுக்கு, எழுந்து குழந்தைகளுக்குச் சமைப்பதற்கு நேரம் இருக்காது. அதைப் போக்குவதற்காகக் கொண்டு வந்த திட்டம்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இன்று ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

### மகளிர் உரிமைத் தொகை

அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வி பயிலும் கல்லூரி மாணவர்களுக்குப் புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் மூலமாக இன்று முதலமைச்சர் அவர்கள் மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை வழங்கிக் கொண்டிருக்கிறார். புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 25,000 மாணவ மாணவிகள் இந்த தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர். இன்று தமிழ்நாடு முழுவதும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்குகின்ற திட்டத்தையும் தொடங்கி, தந்து முடித்துவிட்டார். இவை அனைத்துக்கும் மேலாக ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற ஒரு திட்டம், அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்.

இந்த திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம்முடைய முதலமைச்சர் வழங்கி வந்தார்.

சமீபத்தில் இந்தத் திட்டத்தை எப்படியாவது முடக்க வேண்டும் என்று ஒரு கூட்டம் முயற்சி செய்தது. அதை முறியடிக்கின்ற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், “என்னுடைய தமிழ்நாட்டு மகளிருக்கு 1,000 ரூபாய் தருவதை நீங்கள் நிறுத்தினால் நான் 5,000 ரூபாய் தருவேன்” என்று கூறி, இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கும் 5,000 ரூபாய் ஒரே தவணையில் கொடுத்துவிட்டார். அதாவது பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்குச் சேர்த்து 3,000 ரூபாயும், கோடை காலத்திற்குச் சிறப்பு நிதியாக 2,000 ரூபாயும் என மொத்தம் 5,000 ரூபாயை நம்முடைய முதலமைச்சர் வழங்கியுள்ளார்.

### ரூ.32 கோடி வங்கிக் கடன் இணைப்பு

இன்று சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த சகோதரிகள் வந்திருக்கிறீர்கள். 32 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் இணைப்பு இன்று மட்டும் வழங்கப்படுகிறது. இப்படி மகளிரின் பொருளாதாரச் சுதந்திரம், மகளிரின் உரிமை, மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஆகியவற்றையெல்லாம் நம்முடைய திராவிட மாடல் அரசு இன்று உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதேபோன்று இளைஞர்கள் மத்தியில் விளையாட்டை ஊக்குவிக்க நம்முடைய அரசு இன்று பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது.

கடந்த ஆண்டு கிராமப்புற ஊராட்சிகளுக்கெல்லாம் விளையாட்டு உபகரணங்களை வழங்கினோம். அது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. உடனே முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதை வழங்க வேண்டும் என்று இந்தத் திட்டத்தைத் தொடங்கி, இன்று இங்கே புதுக்கோட்டையில் இருக்கக்கூடிய அனைத்து புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள எட்டு மாவட்டங்களுக்கு இந்த விளையாட்டு உபகரணங்களை வழங்குகிறோம்.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் விளையாட்டுத் துறை மிகப்பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது.

நாம் விளையாட்டுத் துறைக்குக் கூடுதல் முக்கியத்துவம் தருவதால், நம்முடைய தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் இன்று தேசிய, சர்வதேச அளவில் சாதனைகள் புரிந்து பதக்கங்களைக் குவித்து, நம்முடைய தமிழ்நாட்டிற்கும் இந்திய ஒன்றியத்திற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு உதாரணம்தான் இன்று மேடையில் இருக்கக் கூடிய இரண்டு வீரர்கள்.

### முதல் சர்வதேச நடுவர்

சகோதரர் அங்கப்பன் அவர்கள் நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர். சக்கர நாற்காலிப் பிரிவில் சதுரங்கப் போட்டிக்கான முதல் சர்வதேச நடுவர் என்ற பெருமையைப் பெற்றவர். அவருக்கு நம் அரசு சார்பாக, புதுக்கோட்டை மாவட்ட சதுரங்கப் பயிற்சியாளர் பணி வழங்கப்பட்டிருக்கிறது. சகோதரர் அங்கப்பன் அவர்கள் மேலும் பல சாதனைகள் புரியவும், சாதனையாளர்களை உருவாக்கவும் என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று சர்வதேச மிதிவண்டி வீரர் தம்பி கிஷோர் அவர்களும் வருகை தந்திருக்கிறார். பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு ஏராளமான பதக்கங்களை இன்று அவர் வென்று வருகிறார். அங்கப்பன், கிஷோர் ஆகிய இருவருமே விளையாட்டுத் துறையில் சாதிக்க நினைக்கின்ற பல இளைஞர்களுக்கு இன்று ஒரு தூண்டுதலாக இருக்கின்றார்கள். உங்களில் இருந்து இவர்களைப் போலச் சிறந்த விளையாட்டு வீரர்கள் உருவாக வேண்டும் என்றுதான் இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இளைஞர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் என்னென்ன தேவையோ ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்து கொண்டிருக்கிறார்.

### வெற்றி பெறும் வாய்ப்பு

நம்முடைய அரசின் முன்னெடுப்புகளால் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை வேடிக்கை பார்க்கின்ற இடத்திலிருந்து இன்று தமிழ்நாடு, சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்வது மட்டுமல்லாமல் அதில் வெற்றி பெறுகின்ற ஒரு வாய்ப்பையும் முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

தமிழ்நாட்டு வீரர்கள் சர்வதேச, தேசியப் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக, உடனுக்குடன் நிதியுதவியையும் வழங்குகிறோம். அப்படி வெற்றி பெற்றால், அவர்களுக்கு உடனடியாக உயரிய ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து வழங்கிக் கொண்டிருக்கிறார்.

மேலும் சர்வதேச, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டில், இதுவரை 120 விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணியினை முதன்முறையாக நம்முடைய அரசு வழங்கியுள்ளது. இன்னும் இரண்டு நாட்களில் மேலும் 150 விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்க உள்ளார். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதன்முறையாக இத்தனை விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு கொடுப்பது நம்முடைய திராவிட மாடல் அரசுதான், நம்முடைய முதலமைச்சர் மட்டும்தான்.

அதுமட்டுமல்லாமல் இன்று நம்முடைய அரசு அமைந்த பிறகு இந்த நான்கு ஆண்டுகள் பத்து மாதங்களில் 141 சிறிய விளையாட்டு அரங்குகளை தமிழ்நாடு முழுவதும் கட்டியுள்ளோம். முந்தைய பத்தாண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் விளையாட்டு உள்கட்டமைப்பிற்கு அ.தி.மு.க அரசு ஒதுக்கிய நிதி வெறும் 380 கோடி ரூபாய் மட்டுமே. 10 ஆண்டுகளுக்கு 380 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். ஆனால், நம்முடைய தி.மு.க அரசு இந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 600 கோடி ரூபாயை விளையாட்டு உள்கட்டமைப்பிற்கு மட்டும் ஒதுக்கிச் செயல்படுத்தியுள்ளது.

### உள்விளையாட்டு அரங்கம்

இந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் விளையாட்டுத் துறை சார்பாக, ஏராளமான பணிகள் நடைபெற்றுள்ளன. ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சிறிய விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது. அதேபோல் அறந்தாங்கி, திருமயம், கந்தர்வக்கோட்டை தொகுதிகளில் தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறிய விளையாட்டு அரங்குகள், மாவட்ட விளையாட்டு வளாகத்தில் மூன்றரை கோடி ரூபாய் செலவில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம், புதுக்கோட்டையில் 6 கோடி ரூபாய் செலவில் சர்வதேச தரத்திலான ஹாக்கி தரைத்தளம் ஆகியவை அமைக்கப்பட உள்ளன. இப்படிப் புதுக்கோட்டையை விளையாட்டு வீரர்களின் கோட்டையாக மாற்ற, பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு எப்படி எல்லா துறைகளிலும் முதன்மை மாநிலமாக இருக்கிறதோ, அதே போன்று விளையாட்டுத் துறையிலும் நிச்சயம் மிக விரைவில் முதலிடத்தை அடையும். இந்த சாதனை தொடர, மகளிரும் இளைஞர்களும் வந்திருக்கிறீர்கள், உங்களுடைய ஆதரவு இந்த அரசுக்குத் தேவை. இந்த அரசுக்குத் தொடர்ந்து நீங்கள் உங்களின் ஆதரவைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கலைஞர் விளையாட்டு உபகரணங்களைப் பெற்ற இளைஞர்களுக்கும் அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற்ற பயனாளிகள் அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் எஸ். ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளரும் தாட்கோ தலைவருமான இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் முத்துராஜா, ராமச்சந்திரன், சின்னத்துரை, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் அருணா ஐ.ஏ.எஸ்., புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் செல்லப்பாண்டியன், ராஜேஷ், அண்ணாமலை, மாநகர துணை மேயர் லியாகத் அலி, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன், சர்வதேச சதுரங்க நடுவர் அங்கப்பன், சர்வதேச மிதிவண்டி வீரர் கிஷோர் மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.




---

### பெரம்பலூர் மாவட்டத்தில் அரசுப்பள்ளி

## மாணவ-மாணவிகளை மாவட்டத்தின் முக்கியப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லும் கல்விச்சுற்றுலா!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.மிருணாளினி பங்கேற்பு!

பெரம்பலூர்,பிப்.18-

பள்ளிக்கல்வித்துறையின் மூலம் மாதந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவருடன் மாணவர்கள் கலந்துரையாடும் COFFEE WITH COLLECTOR என்ற நிகழ்வு நடத்தப்படுகின்றது. கடந்த 13.01.2026 அன்று நடைபெற்ற COFFEE WITH COLLECTOR நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்துரையாடிய அரசுப்பள்ளி மாணவ, மாணவிகள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச்சிறப்பு மிக்க இடங்கள் மற்றும் சுற்றுலா தலங்களை சுற்றிப் பார்க்க ஆசையாக உள்ளதாக தெரிவித்தனர்.

மாணவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் கல்மரப்பூங்கா, காரை புதைபடிவ பூங்கா, பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அம்மோனைட்ஸ் மையம், அரியலூர் மாவட்டம் வாரணவாசியில் உள்ள அருங்காட்சியகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை இணைக்கும் வகையில் செல்லக்கூடிய ஒரு நாள் கல்விச்சுற்றுலா நடத்த திட்டமிடப்பட்டது.

அதனடிப்படையில், இன்று முதற்கட்டமாக மேலமாத்தூர், அகூர், ஒதியம் மற்றும் குன்னம் ஆண்கள், பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு பயிலக்கூடிய 125 மாணவர்கள், 107 மாணவிகள் என மொத்தம் 232 மாணவ மாணவிகளை ஒரு நாள் கல்விச்சுற்றுலாவிற்கு அழைத்துச்செல்லும் பேருந்துகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.மிருணாளினி, மேலமாத்தூர் அரசு உயர் நிலைப்பள்ளியில் 06.02.2026 அன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதன்பின்னர், சாத்தனூர் கல்மரப்பூங்காவில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் அரியலூர் மாவட்டங்களில் உள்ள தொல்லியல் சார்ந்த சிறப்புகளையும், முதலமைச்சர் அவர்கள் உத்தரவால் காரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதைபடிவ பூங்கா மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள அம்மோனைட்ஸ் அருங்காட்சியங்களின் முக்கியத்துவத்தை மாணவர்களிடையே விளக்கினார்.

பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தொல்லுயிர்களின் படிமங்களின் நமது பெரம்பலூர் அரியலூர் மாவட்டங்களில் கிடைப்பது குறித்து உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆய்வாளர்கள் ஆர்வமுடன் வந்து பார்வையிடுகின்றனர். நமது மண்ணின் முக்கியத்துவத்தை, வரலாற்றுத்தொன்மைகளை மாணவச் செல்வங்களாகிய நீங்களும் அறிந்துகொள்ள வேண்டும் என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.

பின்னர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கல்மரப்பூங்காவில் உள்ள அருங்காட்சியகத்தினையும், கல்மரத்தையும் மாணவ, மாணவிகளுடன் பார்வையிட்டார்.

மேலும், சிவசங்கர் அறக்கட்டளை மூலம் மாணவ, மாணவிகளுக்கான குறிப்பேடு, பேனா, அந்தந்த பகுதிகள் குறித்த விளக்க துண்டு பிரசுரங்கள், மதிய உணவு உள்ளிட்டவை மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. இது போன்ற அடுத்தடுத்து மற்ற பள்ளிகளுக்கும் ஒரு நாள் கல்வி சுற்றுலா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது,

இந்நிகழ்ச்சியில் தொல்லியல் வரலாற்று ஆய்வாளர் பிரசாத், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் தொல்லுயிர் படிமங்கள் கிடைக்கும் பகுதிகள் குறித்தும் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் மாணவ மாணவிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

இதில், ஆலத்தூர் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, முதன்மைக்கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், ஆலத்தூர் வட்டாட்சியர் முத்துக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கரூர் - குப்பம் வேலாயுதம்பாளையத்தில்

## கலைஞரின் கனவு இல்லம் - 83 குடியிருப்புகள்!

### பயனாளிகளுக்கு செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், பிப்18-

கரூர் மாவட்டம் பரமத்தி ஊராட்சி ஒன்றியம். குப்பம் வேலாயுதம்பாளையத்தில் கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 83 குடியிருப்புகளை பயனாளிகளுக்கு கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார். அரவக்குறிச்சி தொகுதி எம்.எல்.ஏ ஆர் . இளங்கோ முன்னிலை வகித்தார்.

பின்னர் செந்தில் பாலாஜி கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2030ஆம் ஆண்டிற்குள்தமிழ் நாட்டை 'குடிசைகள் இல்லாத மாநிலமாக' மாற்றுவதற்காக ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கான்க்ரீட் வீடுகள் கட்டித்தர ஆணையிட்டார்கள். குறிப்பாக கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் குடிசை வீடுகளை நிரந்தர கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

இத்திட்டத்தில் வீடு கட்டுவதற்கு பயனாளி ஒருவருக்கு ரூ.3.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக வீடற்ற ஏழைகள் மற்றும் குடிசைகளில் வசிக்கும் தகுதியுள்ள நபர்கள் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, குறைந்தபட்சம் 360 சதுர அடி பரப்பளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறதென கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 83 குடியிருப்புகளின் சாவியை பயனாளிகளுக்கு செந்தில்பாலாஜி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்.வீரபத்திரன், ஒன்றிய செயலாளர் கார்த்திக், உதவி இயக்குநர் தணிக்கை ஞானசேகரன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.